முறையல்ல. அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தரவில்லை; அது மட்டும் என்னால் சொல்ல முடியும்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

6. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம் நடத்திய சர்வே அடிப்படையில் இன்றைக்கு ஒருவேளை உணவிற்கே வழியில்லாமல் திண்டாடி வருகின்ற மேற்கு வங்கம், ஒடிசா, மத்தியப் பிரதேசம், அசாம், சத்தீஸ்கர் போன்ற இன்னும் பிற வடபுலத்து மாநில மக்களை பசிப் பிணியிலிருந்து காப்பற்றிட வழி தெரியாமல், விழி பிதுங்கி நிற்கின்ற முதலமைச்சர்களுக்கு மத்தியிலே, அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் வழிகாட்டுகின்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தமிழகத்தில் கல்விக் கூடங்கள் தொடங்கி, ஆண்டவன் உறையும் ஆலயங்கள் வரை அனுதினமும் அன்னதானம், இல்லங்கள்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி. மேலும், மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கையால் உயர்ந்து வருகின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்திட 11 அம்ச திட்டமென அள்ளித் தந்து, “பட்டினி” என்னும் வார்த்தை அன்னைத் தமிழகத்தின் எல்லைக்குள்ளே எங்கேயும் இல்லை என்ற நிலையை (மேசையைத் தட்டும் ஒலி) தன் சீரிய சிந்தனையால் உதித்திட்ட சீர்மிகுத் திட்டங்களால் உருவாக்கி, இன்றைக்கு இந்தத் தலைமுறையை நலமோடு வாழ வைப்பது மட்டுமன்றி, வருங்கால தலைமுறையும் நலமோடும், வளமோடும் வாழ வைத்திட, வல்லரசு நாடுகளும், வளர்ந்த தேசங்களும் மட்டுமே சிந்திக்கின்ற தொலைநோக்குப் பார்வையுடன் இந்திய திருநாட்டில் உள்ள மாநிலங்களில் எங்கும் இதுவரையில் காணாத ‘தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023’-ஐ வழங்கி, தாய்த் தமிழ்நாட்டை தலைசிறந்த நாடாக உருவாக்கிட, உறங்காது விழித்து,*

2013 ஏப்ரல் 5] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

உண்ணாது உழைத்து, அயராது சிந்தித்து, தனி மனித இராணுவமாய், தியாக வரலாறு படைத்து வருகின்ற புறநானூற்று தாய் (மேசையைத் தட்டும் ஒலி), வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் நாளைய இந்தியத் திருநாடு படைக்கப்போகின்ற புதிய வெற்றி வரலாறுதான், இந்த உலகத்திற்கே வழி காட்டும் சாதனை வரலாறு ஆகும். இந்தச் சாதனை வரலாற்றைப் படைத்திட மக்கள் சக்தியோடு, தெய்வ சக்தியும், உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் பெற்றிருக்கும் இந்தியத் திருநாட்டின் வழிகாட்டி, வாழும் வேலு நாச்சியார், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களை பணிந்து வணங்கி, 2012-2013 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 49 முதல் 57-வது வரையிலான 9 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளித்து அமைகின்றேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013-2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,873,57,73,000/-, மூலதனக் கணக்கில் ரூ.165,27,51,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.150,30,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 3, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.